**செ.வெ. எண்: 396** **நாள்: 09–07–2012**

# செய்தி வெளியீடு

இராமேஸ்வரத்தை சார்ந்த 5 மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது கடலில் சிக்கிக் கொண்டனர். அவர்களை ஒரு படகில் மீட்கச் சென்ற 5 மீனவர்களும் திரும்ப வரவில்லை. அந்த 10 மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் 2.7.2012 அன்று சிறைபிடிக்கப்பட்டனர். இந்த தகவல் அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 4.7.2012 அன்று பாரத பிரதமர் அவர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதினார். அந்தக் கடிதத்தில், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் இதில் தலையிட்டு, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, அந்நாட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள ராமேஸ்வரம் மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்த துரித நடவடிக்கையின் பயனாக 2.7.2012 அன்று இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் மன்னார் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தால் இன்று (9.7.2012) விடுவிக்கப்பட்டனர். அவர்கள் இலங்கையில் உள்ள இந்திய தூதர அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு இன்னும் ஓரிரு நாட்களில் தமிழகம் வந்து சேருவார்கள்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 9.7.2012